16.10.2025.
எம்.சி.10/2024
**ம.சா.1 விஜயராணி.**
**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை.**

நான் யாருக்கு எதிராக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எதிர்மனுதாரராகிய எனது கணவர்மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என் கணவருக்கு எதிராக நான் ஜீவனாம்சம் கோரி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளேன். நான் எங்கு வசித்து வருகிறேன் என்றால் வந்தவாசி தாலுக்கா சோரபுத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு திருமணம் நடந்து 37 வருடங்கள் ஆகிறது. எனக்கும் எதிர்மனுதாரருக்கும் பிறந்தது இரண்டு மகன்கள். எனது மகன்களுக்கு திருமணம் முடிந்துவிட்டது. திருமணத்திற்கு பிறகு நானும் எனது கணவரும் எத்தனை வருடங்கள் சேர்ந்து வாழ்ந்தோம் என்றால் 5 வருடங்கள் சேர்ந்து வாழ்ந்தோம். நானும் எனது கணவரும் எத்தனை வருடமாக பிரிந்து வாழ்ந்து வருகிறோம் என்றால் 25 வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வருகிறோம்.

எனது கணவர் 2-வது திருமணம் செய்துகொண்டது எப்போது தெரியவந்தது என்றால் எனக்கு கடந்த 10 வருடங்களுக்கு முன்புதான் தெரியவந்தது. என் கணவர் 2-வது திருமணம் செய்துகொண்டது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் ஏதும் கொடுத்தேனா என்றால் இல்லை.